சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் நாள் திங்கட்கிழமை

I.A.No.7/2023 in OS.No.358/2018

(CNR.No.TNTP180004992017)

S. மகாலிங்கம் ......மனுதாரர்/பிரதிவாதி.

//எதிர்//

V. வினோத் (எ) ஆன்சய் வினோத் .....எதிர்மனுதாரர்/வாதி.

இம்மனுவானது 15.10.2024 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஜான்சன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>உத்தரவு</u>**

மனுவானது மனுதாரர்/பிரதிவாதியால் உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 26 விதி 1ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அபிடவிட்டில் கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர்/பிரதிவாதி, மனுவை பிரதிவாதியின் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை சமார்ப்பிக்க, பிரதிவாதி தரப்பு நேரடி சாட்சியம் அளிக்க முடியாத சூழ்நிலை உள்ளதால், பிரதிவாதியின் வீட்டில்



R MOHANA Digitally signed by R MOHANA

சாட்சியம் மற்றும குறுக்கு விசாரணையை பதிவு செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய கோரும் மனுவினை அனுமதித்து உத்தரவிட கோரப்பட்டுள்ளது.

2. மனுதாரரின் மனு மற்றும் அபிடவிடின் சுருக்கம் –

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். வழக்கின் விபரம் மனுதாரருக்கு நன்கு தெரியும். மனுதாரர் மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சியங்களை பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆனால், மனுதாரருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து தொடர் சிகிச்சை பெற்று வருகிறார். ஆகையால், மனுதாரரால் நீதிமன்றத்தில் வந்து நேரடி சாட்சியம் அளிக்க முடியாத அளவிற்கு உடல்நிலை பாதிப்படைந்து இருக்கிறது. மனுதாரர் 2018 ல் இருந்து தற்போதுவரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதற்கான மருத்துவ அறிக்கை மற்றும் மருத்துவ பரிசோதனைகளை இந்த மனுவுடன் இணைத்துள்ளார். ஆனவே, மனுவை நீதிமன்றம் பிரதிவாதியின் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை சமர்ப்பிக்க, பிரதிவாதி தரப்பு நேரடி சாட்சியம் அளிக்க முடியாத சூழ்நிலை உள்ளதால், பிரதிவாதி வீட்டில் சாட்சியம் மற்றும் குறுக்கு விசாரணை பதிவு செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்ககோரி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிருரையின் தமிழாக்க சுருக்கம் –

மனுதாரரால் இந்த மனு மற்றும் அபிடவிட்டில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரரால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்தும் பொய் என மறுக்கப்படுகிறது. மேற்படி அனைத்து சங்கதிகளையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.



R MOHANA Digitally signed by R MOHANA

மனுவானது சட்டப்படிக்கும் பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனு அபிடவிட்டில் மனுதாரருக்கு இருதய சிகிச்சை செய்து தொடர் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதும் ஆகையால், மனுதாரரால் நீதிமன்றத்தில் வந்து நேரடி சாட்சியம் அளிக்க முடியாத அளவிற்கு உடல்நிலை பாதிப்படைந்து இருக்கிறது என்றும் சொல்லியிருப்பது முற்றிலும் தவறு என மறுக்கப்படுகிறது. மனுதாரர் மனுவோடு தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் வழக்கறிஞர் ஆணையரை நியமிப்பதற்கான போதுமான காரணமாக அமையவில்லை. மனுதாரரின் உடல் நிலை நன்றாக இருக்கிறது, அவர் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகாமல் சாட்சியம் சொல்லாமல் தவிர்த்து வருகிறார். எனவே, மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்று கூறி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

5. தீர்வு காணவேண்டிய பிரச்சினை –

இந்த இடைக்கால மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

6. தீர்வு –

மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் மனுதாரருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்துள்ளதால் தொடர் சிகிச்சையில் இருந்துவருவதாகவும் அதற்கான மருத்துவ ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ளதாகவும் அதனை கவனத்தில் கொண்டு மனுவினை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.



R MOHANA Digitally signed by R MOHANA

7. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுவினை அனுமதிப்பதற்கு போதுமானதாக இல்லை என்றும் மனுதாரர் நல்ல உடல் நிலையில் இருக்கிறார் என்பதால் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன. அசல் வழக்கு கிரைய ஒப்பந்த பத்திரத்தின்பேரில் எதிர்மனுதாரர்/வாதி செலுத்தியதாக கூறும் முன் தொகையை திரும்ப வரப் பெறுவதற்காக பண வழக்கு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கு பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணைக்கான நிலையில் நிலுவையில் உள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இருதய அறுவை சிகிச்சை செய்து 2018 ஆம் வருடத்திலிருந்து தற்போது வரை தொடர் சிகிச்சையில் இருந்து வருவதாக கூறி அதற்கான மருத்துவ அறிக்கைகளின் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சங்கதிகளின்படி எதிர்மனுதாரர்/வாதியிடமிருந்து எந்த தொகையும் மனுதாரர் பெற்றுக்கொள்ளவில்லை என்று எதிர்வாதம் செய்து வருவதால் அதுகுறித்து நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர்/பிரதிவாதிக்கு உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. வாதி தரப்பில் சாட்சியம் முடிவடைந்த நிலையில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை சமர்பிக்க வேண்டியுள்ளதாலும் மனுதாரர் / பிரதிவாதிக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து அதனை தொடர்ந்து தொடர் சிகிச்சையில் இருந்து வருவதாக கூறி அதற்கான மருத்துவ அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொண்டு இந்நீதிமன்றம்



R MOHANA Digitally signed by R MOHANA

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதிக்கலாம் என்று கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதக சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புள்ளது என்பதாலும் மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என்று இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,** மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை பற்றிய உத்தரவு இல்லை. நீதிமன்ற ஆணையராக திரு.P.ஸ்ரீதர் (வழக்கறிஞர் பதிவு எண். MS.No.5225/2021) வழக்கறிஞராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் முன் அறிவிப்பு கொடுத்து மனுதாரரின் (பி.வா.சா.1) முதல் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை பதிவு செய்து அதனை அறிக்கையுடன் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார். நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.10,000/– நிர்ணயம் செய்யப்படுகிறது. அதனை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு நேரடியாக செலுத்த அறிவுறுத்தப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வாரண்ட் பெற்ற தினத்திலிருந்து சாட்சிய பதிவுகளை அறிக்கையுடன் தாக்கல் செய்ய கால அவகாசம் ஒரு மாத காலம். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையுடன் சாட்சிய பதிவுகள் தாக்கல் செய்ய அழைக்க 20.11.2024.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 21 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

R MOHANA Digitally signed by R MOHANA

சார்பு நீதிபதி,

இலால்குடி.

## சான்றாவணங்களின் பட்டியல்

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் – இல்லை

R MOHANA Digitally signed by R MOHANA

சார்பு நீதிபதி,

இலால்குடி.

Subordinate Court Lalgudi

**IA.No.7/2023 in OS.No.358/2018**

Draft / Fair Order

**Date – 21.10.2024**